

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் க.சொ.க. கண்ணன் ஜெயங்கொண்டம் வட்டாச்சியர் அலுவலகத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் தேர்தல் நடத்தும் அலுவலர் ஆனந்த வேலிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், காங்கிரஸ் கட்சி இராஜேந்திரன், வி.சி.க. மாவட்டச் செயலாளர் கதிர்வளவன், கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் இளங்கோவன், மாவட்ட துணைச் செயலாளர் மு.கணேசன், நகர கழகச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20, 21 மற்றும் 5க்கு உட்பட்ட திருவப்பூர் மற்றும் கோவில்பட்டி பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த வாக்கு சேகரிப்பின் போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் தொண்டைமான், புதுக்கோட்டை வடக்கு மாநகரக் கழக பொறுப்பாளர் எம்.லியாக்கத் அலி, புதுக்கோட்டை தெற்கு மாநகரக் கழக பொறுப்பாளர் வே.ராஜேஷ், பொதுக்குழு உறுப்பினர் என். சாத்தையா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலரும் கலந்து கொண்டனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆசி எம். தியாகராஜன் கரூர் மாநகர மத்திய கிழக்கு பகுதி வஞ்சியம்மன்கோவில், பலிஜவார்நாயுடு தெரு பகுதிகளில், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்குமாருடன் சென்று வாக்கு சேகரித்தார். பெண்கள் திரண்டு வந்து ஆரத்தி எடுத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிப்போம் என உறுதி அளித்தனர்.

### திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி

# 16வது வார்டில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தீவிர வாக்கு சேகரிப்பு!

## பொதுமக்கள் உற்சாக வரவேற்பு!

திருவெறும்பூர், ஏப். 9 -

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.க. வேட்பாளரும், அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட 16வது வார்டு பகுதியில் தனது தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.



நடைப்பயணம்: தொகுதிக்கு 16 வது வார்டில் அனைத்து தெருக்களிலும் அமைச்சர் நேரடியாக நடந்து சென்று பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.

இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் ஏ.எம்.ஜி. விஜயகுமார், மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் சண்முகம், தங்கவேலு ஆகியோர்

கூட்டணி ஆதரவு: திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் புடைசூழ உற்சாகமாக இந்தப் பிரச்சாரப் பயணம் நடைபெற்றது.

பொதுமக்களிடையே தமிழக அரசின் சாதனைகளை விளக்கி, உதயசூரியன் சின்னத்திற்கு அமைச்சர் அன்பில் மகேஸ் ஆதரவு கோரினார்.

பெண்களின் ஆதரவு இருப்பவர்களுக்கே வெற்றி என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்

திருச்சிராப்பள்ளி: திருவெறும்பூர் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:-

பெண்கள் தரும் எழுச்சியே எங்களின் பலம் “நாங்கள் இந்த பிரச்சாரப் பயணத்தைத் தொய்வின்றித் தொடர்வதற்குப் பெண்கள் எங்களுக்குத் தரும் உற்சாகமான வரவேற்பும், அவர்களின் முகமலர்ச்சியும், எழுச்சியுமே முக்கியக் காரணமாகும். எந்தவொரு இயக்கத்திற்குப் பெண்களின் பேராதரவு இருக்கிறதோ, அந்த இயக்கம் தான் மீண்டும் ஆட்சிக்கு வரும். அதனை நிரூபிக்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றார்.”

மகளிர் மற்றும் கல்விக்கான முன்னோடித் திட்டங்கள் தி.மு.க. அரசின் சாதனைகளைப் பட்டியலிட்ட அமைச்சர், பின்வரும் திட்டங்களைக் குறிப்பிட்டுக் காட்டினார்:

மகளிர் விடியல் பயணம்: கட்டணமில்லாப் பேருந்து வசதி.

மகளிர் உரிமைத் தொகை: தகுதியுள்ள பெண்களுக்கு மாதம் -1000 வழங்கப்படுவது.

புதுமைப்பெண் திட்டம்: அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரி செல்லும் மாணவிகளுக்கு மாதம் - 1000 உதவித்தொகை.

தமிழ்ப் புதல்வன் திட்டம்: மாணவர்களின் உயர் கல்வியை ஊக்குவிக்க மாதம் - 1000 வழங்கும் திட்டம்.

நான் முதல்வன்: மாணவர்களின் பட்டப்படிப்போடு அவர்களின் வேலை வாய்ப்புத் திறனை மேம்படுத்தும் திட்டம்.

மக்களைத் தேடி மருத்துவம்: வீடு தேடி வரும் மருத்துவச் சேவை மற்றும் சிறப்பு மருத்துவ முகாம்கள்.

திராவிட மாடல் 2.0: தேர்தல் வாக்குறுதிகள்

தொடர்ந்து பேசிய அவர், அடுத்த கட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள ‘திராவிட மாடல் 2.0’ குறித்துப் பேசுகையில்:

உரிமைத் தொகை உயர்வு: மகளிர் உரிமைத் தொகை - 1000 என்பது - 2000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இல்லத்தரசிகள் திட்டம்: ஒவ்வொரு இல்லத்தரசிக்கும் - 8000 மதிப்புள்ள கூப்பன்கள் வழங்கப்பட்டு, அதன் மூலம் அவர்களுக்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக் கொள்ள வழிவகை செய்யப்படும்.

காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்: தற்போது 1 முதல் 5ஆம் வகுப்பு வரை உள்ள 20 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் காலை உணவுத் திட்டம், திராவிட மாடல் 2.0இல் 8ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் கூடுதலாக 15 லட்சம் மாணவர்கள் சேர்ந்து, மொத்தம் 35 லட்சம் மாணவர்கள் பயனடைவர்.

“பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக என் இதயத்திற்கு நெருக்கமான திட்டம் காலை உணவுத் திட்டம். மாணவர்கள் பசியின்றி வகுப்பறையில் அமர வேண்டும் என்பதே முதல்வரின் நோக்கம்.”

**திருவெறும்பூர் எனது தாய் வீடு**

இறுதியாகத் தொகுதி குறித்துப் பேசிய அவர், “திருவெறும்பூர் தொகுதியை நான் எனது தாய் வீடாகவே கருதுகின்றேன். அதனால் தான் இப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை அறிந்து அவற்றை உடனுக்குடன் நிறைவேற்றி வருகின்றேன். ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்கள் மூலம் பெறப்பட்ட மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சி என்பது மக்களோடு மக்களாக நின்று பணியாற்றிய ஆட்சியாகும்,” என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் காரிமங்கலம் மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட கும்பாரஅள்ளி பொதுமக்களை சந்தித்து,திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் தேர்தல் பார்வையாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி இருந்தார்.

### மயிலை மேற்குப் பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

## கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப். 9-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனையில் களத்தில் இளைஞர் அணி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து உதயசூரியனுக்கு வாக்கு கேட்டு மயிலை மேற்கு பகுதி தி.மு.க இளைஞர் அணி சார்பில் நேற்று (8.4.2026) 122 அ வட்டம் ஆ நாகராஜன் வட்டச் செயலாளர் தலைமையில் வாக்குச் சேகரித்தனர். தொடர்ந்து இன்று (9.4.2026) 123 வது வட்டம் மூ.இ.ஏழுமலை வட்டச் செயலாளர் தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் முன்னிலையில் ஆகிய தேதியில் மாலை 4 மணியளிவில் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் நடைபெறுகிறது.

இதில் நா.உதயன், கு. லோகேஷ், ஜே.ராஜேஷ், அரவிந்த் ரமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

எனவே மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி பகுதி துணை வட்ட அமைப்பாளர்கள் வட்டத்துணை அமைப்பாளர்கள் பாக அமைப்பாளர்கள் மற்றும் கழக செயல் வீரர்கள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறோம்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் சீ.வி. திவான்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பீதியில்...!

எடப்பாடி மறைக்க முனைந்த
பொள்ளாச்சி பாலியல்
சம்பவத்திற்கும்

சாத்தான்குளம்
கொடுமைக்கும்

நீதி பெற்றுத் தந்திருக்கும்
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலினின்
திராவிட மாடல்
ஆட்சி

அடுத்து கொடநாடு மர்மத்தின்
முடிச்சையும் அவிழ்க்கும்
என்னும் அச்சத்தில்


பீதியிலும் பேதியிலும்
மடப்பாடி...



**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், நகர கழகச் செயலாளர் குட்டி (எ) சுதாகர் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் கே.எம்.தண்டபாணி, கழக தகவல் தொழில் பணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் என்.ஆர்.கார்த்திகேயன் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். இதில் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.